சனவரி-2014

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 58
பகுதி : 3

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



10.01.2014 அன்று மதுரைத்தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க்கல்லூரியில் சமூகநல்லிணக்கப் பொங்கல் விழாவினைக் காவல்துறை உதவி ஆணையாளர் திருமிகு. பு. புருஷோத்தமன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திருமிகு. சு. வீரணசாமி அவர்கள், கல்லூரி முதல்வர் முனைவர். மு. மீனா அவர்கள் மற்றும் பேராசிரியர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58 திங்கள் இதழ்

பகுதி : 3 திருவள்ளுவர் ஆண்டு 2044

ஜனவரி 2014




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வண்ணச்சரபரின் சீர்திருத்தச் சிந்தனைகள் | முனைவர் நெல்லை. ந. சொக்கலிங்கம் | 4 |
| கம்பன் காட்டும் தேசிய நீர் வழிச்சாலை | இரா. மகாலட்சுமி | 12 |
| குறையட்டும் ! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 16 |
| பஞ்ச பூதங்கள் | ஆறுவிரல் ஐம்பொறி | 17 |
| சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே ! | பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன் | 19 |
| உலா இலக்கிய வகை வளர்ச்சி | முனைவர் கி. இராசா | 29 |
| திருமண வாழ்த்து மடல் | | 39 |
| மலை | புலவர் கி. பாண்டுரங்கன் | 40 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

திக்கெட்டும் கால்பரப்பி திசைதோறும் வாழ்ந்திருக்கும்
சிங்கநிகர் நம்தமிழர் நின்றோங்கிச் செழித்திட
மங்காத கனித்தமிழின் தேன்சுவை போலும்
புதுக்கரும்பின் தீஞ்சுவைதான் அதுவாம் – எங்கிலும்
மஞ்சள் கிழங்கின் மங்களம் பொங்கி
மகிழ்ச்சியெங்கும் தங்கி நிறைந்து வழிந்திட
கொட்டும் முரசறைவோம் ! கொண்டாடிப் பாடிடுவோம் !
பொங்கலாய்ப் பொங்கட்டும் நம்தமிழர் நல்வாழ்வு !!

எனும் வாழ்த்துகளுடன் இம்மாத இதழை வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

தமிழ் இலக்கண, இலக்கியப் படைப்புகளைத் தமிழ்கூறும் நல்குலகிற்கு வழங்கிய வண்ணச்சரபம் தண்டபாணி தேசிகரின் சீர்திருத்தச் சிந்தனைகளை முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம் அவர்கள் சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார்.

ஐவகை நிலங்களுக்கும் வளம் சேர்த்த கம்பரின் சரயுநதியின் சிறப்பை ஆய்வாளர் இரா. மகாலட்சுமி அவர்கள் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார்.

திருக்குறளில் இடம் பெற்றுள்ள பஞ்ச பூதங்கள் பற்றிய குறிப்பை திரு. ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் வெளிக்காட்டியுள்ளமை பாராட்டிற்குரியது.

செவ்வியல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களின் சிறப்புத் தன்மையை பேரா. சரளா இராசகோபாலன் அவர்கள் தெளிவுடன் வெளிப்படுத்தியுள்ள பாங்கு போற்றுதற்குரியது.

அதிகம் பேசப்படாத சிற்றிலக்கியங்களுள் ஒன்றான உலா இலக்கிய வகைமையின் வளர்ச்சியைப் பேராசிரியர் கி. இராசா அவர்கள் வழங்கியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இம்மாத இதழில் இடம் பெற்றுள்ளது.

இயற்கையன்னையின் ஓர் அங்கமாகிய மலையின் மேன்மையை யாப்பொழுங்குடன் புலவர் சி. பாண்டுரங்கன் கவிதையாகப் படைத்துள்ளமை மகிழ்விற்குரியது.

மனிதன் நன்னிலத்தில் தலை நிமிர்ந்து நிற்கப் பின்பற்ற வேண்டிய நெறிகளை, கவிவேந்தர் கா. வேழவேந்தன் தம் கவிதையில் சிறப்புற வடித்துள்ளார்.

தமிழ் மொழியின் வளத்தைக் காட்டும் வகையில் இனிமையான பொங்கல் சுவையுடன் இம்மாத இதழ் வெளிவருகிறது.

**ஆசிரியர்**

# வண்ணச்சரபரின் சீர்திருத்தச் சிந்தனைகள்

முனைவர் நெல்லை. ந. சொக்கலிங்கம்

## முன்னுரை

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் (1839 - 1898 ) திருநெல்வேலியில் பிறந்து கௌமார நெறியைத் தமிழகம் எங்கும் பரப்பிய அருளாளர். கிட்டத்தட்ட 50,000 பாடல்கள் பாடியுள்ள இவர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழைப் பல வகைகளிலும் வளப்படுத்திய சொல்லேருழவர். அருட்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் மட்டுமல்லாமல் மூன்று இலக்கண நூல்களையும் இவர் படைத்துள்ளார். இன்னும் பரவலாக அறியப்படாத இவர் ஓர் இலக்கண, இலக்கியக் களஞ்சியம் ஆவார். அழுந்திய கௌமார சமயப் பற்றுடைய வண்ணச்சரபர் தாம் வாழ்ந்த தமிழகத்தின் அக்கால நிலையை நன்குணர்ந்து சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளைத் தம் படைப்புகளில் ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளார். இச் சிந்தனைகளைத் தம் நூல்கள் வழியே வெளிப்படுத்தி இவர் பதிவு செய்துள்ளமையினைத் துலக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## சமகாலச் சூழல்

வண்ணச்சரபர் வாழ்ந்த காலம் ஆங்கில அரசு ஆட்சி செய்து வந்த காலம். நம் தமிழ்ச் சமுதாயம் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து - ஒற்றுமையின்றித் தங்களுக்குள் சமய, சாதி வேறுபாடுகளை வளர்த்து மாறுபட்டு நின்ற காலம். இவர் ஆறு சமயம் சார்ந்த தமிழ் மக்களையும் இணைக்க வேண்டும் என்று வாழ்நாள் முழுதும் பாடுபட்ட சமுதாயச் சிந்தனையாளர். இவ்வேற்றுமைகளை நன்குணர்ந்த வண்ணச்சரபர் காலத்திற்கு ஏற்ற வண்ணம் சமுதாய முன்னேற்றக் கருத்துக்களைத் தம் நூல்களில் கூறித் தம்முடைய சமுதாய உணர்வைப் பதிவு செய்துள்ளார். இவர் வாழ்ந்த காலத்தில் அருட்பிரகாச வள்ளலார் (1823-1874), யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் (1827-1879), மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை

(1826-1889), மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815-1878), மகளிர் இலக்கணம் என்னும் கிரகாச்சிரமதர்மம் இயற்றியுள்ள ஆழ்வார்ப்பிள்ளை என்ற முருகதாசர் (1839-1925), மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை (1855-1897), வெ.ப. சுப்பிரமணிய முதலியார் (1857-1946), போன்ற பலர் வாழ்ந்துள்ளனர். இவர்களுள் பெண்களின் உரிமை, கல்வி பற்றி வேதநாயகரும், மகளிர்தம் இல்லற ஒழுக்கம் பற்றி ஆழ்வார்ப் பிள்ளையும் தங்கள் எண்ணங்களைப் பதிவு செய்துள்ளனர். ஆயின் இவ்விருவரும் வலியுறுத்திக் கூறாத கைம்பெண்டிர் மறுமணம், கலப்புத் திருமணம் குறித்து வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் மிகவும் அழுத்தமாகப் பேசியுள்ளார். மகளிரின் கல்வி பற்றி, பிறர் பேசியுள்ளமை போல வண்ணச்சரபரும் பெண்கல்வியை வலியுறுத்திக் கூறியுள்ளார். அக்காலச் சூழ்நிலையில் வண்ணச்சரபரின் சிந்தனைகள் சீர்திருத்த நோக்குடையனவாகும்.

## மறுமணமும் கலப்பு மணமும்

கைம்மையின் கொடுமையை உணர்ந்த வண்ணச்சரபர் மகளிரின் மறுமணம் பற்றி அழுத்தம் தந்து பேசியுள்ளார். சம காலத்தில் வடபுலத்தில் வாழ்ந்த இராசாராம் மோகன்ராய் இளமைத் திருமணம், சதி என்னும் உடன்கட்டை ஏறுதல் இவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளார். இவற்றையும் சுவாமிகள் அறிந்திருக்க வேண்டும். மற்றும் சமுதாய ஒழுக்கம், குடும்ப ஒழுக்கம் ஆகியன ஆங்கில ஆட்சியின் போது சிதைந்து மரபு மீறல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இவற்றைக் கண்ணுற்ற வண்ணச்சரபர் கைம்பெண்டிர் மறுமணத்தை மனமுவந்து வரவேற்றுப் பேசியுள்ளார் எனில் இது தமிழ் மன்பதைக்குப் புரட்சிச் சிந்தனையாகும். கணவனை இழந்த இளம் பெண்ணின் உள்ள உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்துத் தாம் சார்ந்த சமயத்திற்கும் அப்பாற்பட்டு அப்பெண்ணுடைய மறுவாழ்வு குறித்து எண்ணியதன் விளைவுதான் கைம்பெண்டிர் மறுமணமாகும்.

> நூலிழந்தும் கேளிச்சை நூறாதாள் மற்றுமொரு
> தாலிகட்டிக் கொள்ளத் தகும் (வருக்கக்குறள் 121)

சமகாலப் புலவர்கள் எவரும் கூறாத ஒரு சீர்திருத்தச் சிந்தனையை ஒரு துறவி கூறுவது சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. இதன் வளர்ச்சிநிலைதான் பாரதிதாசனாரின்,

"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே – அங்கு
வேரிற் பழுத்த பலா
காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர் – ஒரு
கட்டழகன்திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்"

(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.106)

என்னும் பாடல் எனில் தவறாகாது. இவ்வாறு பாவேந்தர் கைம்மைப்பழி குறித்தும், கைம்மைக் கொடுமை குறித்தும் கருத்துரைக்க அடிப்படையாக அமைந்தது வண்ணச்சரபரின் எண்ணச்சுரங்கமே என்று கூடக் கருத இடமுண்டு.

தாம் வாழ்ந்த காலத் தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்த கொடுமைகளைக் கண்முன்னர்க் கண்டு வருந்திய வண்ணச்சரபர் கௌமார முறைமை என்ற தம்முடைய நூலில் கைம்பெண்டிர் மறுமணத்தை வரவேற்கும் சீர்திருத்த எண்ணத்தைச் சிறப்புறப் பாடியுள்ளமை நமக்கு வியப்பைத் தருகின்றது. அப்பாடல் இதோ ...

மகப்பேறு மணம்சாவு முதல வாய
வகைகளுக்கும் விதிகள்பல வகுத்தார் முன்னோர்
அகத்தோங்கும் பொருளளவிற் செயலே நன்றாம்
அதுகிடக்க ; நூலிழந்திட்டு அனங்கன் அம்பால்
மிகச்சோரு மடநல்லாள் கலவி வேட்டு
மேவுகருப் பங்கெடுக்கும் வினையை எண்ணில்
சகத்தோர்கள் அறியமற்றோர் கொழுநன் தன்னைச்
சார்ந்திருக்கச் சொன்னமுறை தவறா காதே

(கௌமார முறைமை, கரும காண்டம் : 23)

கணவனை இழந்த பெண்ணின் கற்பொழுக்கம் காக்கப்படுமாயின் குடும்ப ஒழுக்கமும் சமுதாய ஒழுக்கமும் காக்கப்படும் என்பதில் வண்ணச்சரபருக்கு இருந்த ஆர்வம் மேற்கண்ட பாடலிலிருந்து நன்கு புலப்படுகின்றது.

கலப்புத் திருமணத்தையும் கூட வண்ணச்சரபர் வரவேற்றுள்ளமையைப் பின்வரும் அறுவகை இலக்கணத்துள் வரும் நூற்பா ஒன்று தெளிவுறுத்துகின்றது.

தவம் சமயமும் சாதியும் பொருளும்
அங்கசன் நெடுங்கணைக்கு ஆற்றாது அலமரும்
மயலாற் கழிவது மாநிலத் தியல்பே (அறுவகை இலக்கணம்: 322)

தவம், சமயம், சாதி, பணம் இவை காதல் வந்திடக் காதலர்க்கு ஒரு பொருட்டல்ல என்பதால் இவற்றை ஏற்றுக் கொண்டு இணங்குவதுதான் சரியான தீர்வு என்று 19ஆம் நூற்றாண்டிலேயே வண்ணச்சரபர் கலப்புத் திருமணத்தை ஆதரித்துக் கூறிச் சமுதாயப் புரட்சியை விதைத்துள்ளார்.

## பெண் கல்வி

கிரகாச்சிரமதர்மம் எழுதியவரான ஆழ்வார்ப்பிள்ளை என்ற முருகதாசரும், மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளையும் பெண் மக்களின் கல்வி பற்றி விரிவாகவே வலியுறுத்தியுள்ளனர். வேதநாயகர் தம்முடைய பிரதாப முதலியார் சரித்திரத்திலும், சுகுண சுந்தரியிலும், பெண்மதிமாலையிலும் மகளிர் கல்வியறிவு பெற்று உயர வேண்டும் என்று பேசியுள்ளார். இவர்களின் சமகாலத்து வாழ்ந்த வண்ணச்சரபர் பெண்மக்களின் கல்வி குறித்து அவர்களைவிடவும் மிக அழுத்தமாகவே கூறியுள்ளார். தங்களுக்குக் கல்வியைக் கற்றுக்கொடுக்குமாறு ஆண்களைப் பெண்கள் வேண்டுவதாக, வேதநாயகம் பிள்ளை ஒரு கீர்த்தனையில் பாடியுள்ளார். இப்படிப்பட்ட சமகாலச் சான்றோர் சிந்தனையை ஏற்றுக் கொண்ட வண்ணச்சரபர்,

பற்றிழந்த மேலோர் பகர்ந்த பலநூல்கள்
கற்றிடலும் மின்னார் கடன் (மனுநெறித்திருநூல், 11:8)

என்னும் குறள் வழிக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஆண், பெண் இருபாலாரும் கல்வி நலம் பெற்றிருப்பதுதான் இல்லற மேன்மைக்குச் சிறப்பு. அப்படி இருபாலாரும் கல்வி பெறவில்லை என்றால் வலிமை மிகுந்த விலங்கினத்து ஆண் பெண் வகையாகவே கருதப்படுவர் என்று கடுமையாகச் சாடியுள்ளார். இதோ அவர் சாடும் குறட்பா....

கல்வி அழகமையாக் காளையரும் கன்னியரும்

வல்விருகத் தாண்பெண் வகை (மேலது, 16:10)

சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெண்கள் கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும் என்பதனை,

கடக மதியனையாள் கண்ணருட்சீர்க் கல்வி

மடமை அகற்றும் மருந்து (மேலது, 26:8)

என்னும் குறள் வழி வலியுறுத்தியுள்ளார்.

ஒரு குடும்பத் தலைவியாகிய தாய் கல்விகற்றுச் சிறந்திருந்தால், அவளைத் தாய் என்பதனைவிடவும் தந்தை என்று அழைப்பதில் தவறில்லை என்னும் பொருளில் சுவாமிகள்,

நிந்தையறுங் கல்வி நெறியும் அறிதாயைத்

தந்தையென்று சொல்லத் தகும் (மேலது, 43:7)

என்று ஒருபடி மேற்சென்று வலியுறுத்துவதால் இவர் பெண் மக்கள் கல்வியில் எவ்வளவு திண்மையுள்ளம் கொண்டவராக விளங்கியுள்ளார் என்பது பெறப்படும். தமிழகத்துச் சமயத்துறவியர் இவர் போலும் இப்படி வலியுறுத்தவில்லை என்பது இவண் எண்ணத்தகும்.

## தமிழுக்கு முதன்மை

வண்ணச்சரபர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் ஆண்ட காலமாகும். ஆங்கிலக் கல்வி பயில்வதில் தமிழ் மக்கள் தமிழ் மொழியைக் கற்பதனை விட மிகுதியும் ஆர்வம் காட்டினர். மேலும், இதன் தொடர்ச்சியாகத் தமிழகத் திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம் இனைய திருமுறைகள் ஓதப்படாமல் வடமொழி மந்திரங்களே முதன்மை பெற்றுப் போற்றப்பட்டன. இதனை நன்குணர்ந்த் தண்டபாணி சுவாமிகள் திருக்கோயில்களில் தமிழுக்கு முதன்மை தரவேண்டும் என்ற சிந்தனையைப் பரப்பித் தமிழ் மக்கள் உள்ளத்தில் தாய்மொழி விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்தனர். இச்சீர்திருத்த எண்ணத்தை முன்வைக்க முனைந்த வண்ணச்சரபர் தம்முடைய அறுவகை இலக்கண நூலுள் புலமை இலக்கணம் பற்றிக் கூறும் இடத்தில், தமிழின் சுவை அறியாத தெய்வம் இங்கு இருக்குமானால் அது தமிழ் நன்கறிந்த பேயை விடவும் கீழானது என்று முழங்கினார்.

தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணர் அலகையில் தாழ்வெனல் அறமே

(அறுவகை இலக்கணம், 672)

என்பதே அவருடைய முழக்கமாகும்.

தமிழே உயர்ச்சி என்று ஒரு வடமொழிவாணருடன் ஒருநாள் இரவு முழுவதும் வழக்காடி வென்ற தறுகண்மையாளர் இவர். அவ்வெற்றியைக் குறிக்கும் வகையில் தமிழலங்காரம் என்றொரு நூலையே படைத்துத் தம்முடைய தணியாத தமிழ் உணர்வைத் தரணிக்குப் பறைசாற்றிய தமிழ்த்துறவி. மேலும், சான்றோர் கூடியுள்ள அவையில் தமிழை ஒருவன் தாழ்த்தி, இழித்தும் பழித்தும் உரை நிகழ்த்தும் போது அதனை மறுக்காத தமிழ்ப்புலவன் தமிழ்ப் புலவனல்லன்; அவன் வெறும்புலவன் என்று அடைமொழி தந்து நூற்பா (705) ஒன்றைப் படைத்துள்ளார் எனில் வண்ணச்சரபரின் தமிழ்மொழிச் சிந்தனையின் ஆழத்தையும் அகலத்தையும் மொழியுணர்வைப் போற்றும் புதுமைச் சிந்தனையையும் நாம் இனிதே உணர ஒண்ணும். எனக்குத் தமிழே வராது என்று பெருமையுடன் பேசி வந்த அக்காலத்தில் தமிழுணர்வைத் தறுகண்மையுடன் வண்ணச்சரபர் சமுதாயத்தில் கால்கொள்ளச் செய்துள்ளார். இதனால் அவருடைய விழிப்புணர்வுச் சிந்தனை வெளிப்படுகின்றது.

**ஆங்கிலேயரை எதிர்த்தல்**

வண்ணச்சரபர் இந்திய உரிமைப் போரில் நேரடியாக ஈடுபட்டவர் அல்லர். ஆயினும் அன்றைய ஆங்கில அரசு மக்களுக்குச் செய்த கொடுமைகளை எண்ணி மனம் கசிந்தவர். அப்படிக் கசிந்தமையின் விளைவால் ஆங்கிலேயுரை அடக்கும் வல்லமையுடைய அருச்சுனன் போன்ற வீரன் ஒருவன் தோன்ற மாட்டானா? என்று ஏங்கிப் பாடியுள்ளார். பசுவதை, உயிர்க்கொலை, துப்பாக்கி என்னும் திருட்டு ஆயுதம் இவற்றால் மக்களைத் துன்புறுத்திய ஆங்கில ஆட்சியைத் தம்முடைய ஆங்கிலியர் அந்தாதி என்னும் நூல் வழிச் சாடியுள்ளார். சமயத் துறவியாகிய இவர் ஆங்கில அரசு செய்யும் கொடுமைகளின் கொடுமுடி குறித்து வீறு கொண்டு எழுந்து ஒரு கீர்த்தனையும் ஆங்கில ஆட்சி எதிர்ப்பையும் பாடியுள்ளார் எனில் இவர்தம் சீர்திருத்தச் சிந்தனை நமக்கு நன்கு விளங்கும்.

ஆங்கில அரசு விதித்த வரிகள் மக்களை மிகவும் வாட்டிவதைத்தன. இதனை எண்ணி நெஞ்சுருகிய வண்ணச்சரபர்,

ஈன மலியும் கழுதைக்கும் நாய்க்கும் இறைகொளற்கு
மானம் அணுவள வேனும்இல் லாக்கொடு வஞ்சகர்

(ஆங்கிலியர் அந்தாதி, 76)

என்று கொதித்துரைத்தார். இப்படிப்பட்ட வன்கொடுமைகள் நடைபெறும் நாளில் தான் வாழுமாறும் அவற்றைக் காணுமாறும் ஏற்பட்டமை தம் தீவினையே என்று தம்மைத் தாமே நொந்து கொள்கின்றார். இதோ அப்பாடல்,

விழுமிய நான்மறைச் சீலமெல் லாம்குன்ற வெந்நிணந்தேர்
கழுகனை யார்களில் கூத்தாடி வாழ்கொடுங் காலத்தென்னை
அழுது வருத்தப்படுத்திடும் தீவினை.... (ஆங்கிலியர் அந்தாதி, 57)

இவ்வாறு நொந்து கொள்ளும் வண்ணச்சரபர் சிந்தனை சீரிய சிந்தனை என்பதில் ஐயமின்று.

வண்ணச்சரபர் வாழ்ந்த காலச் சூழ்நிலையை அவர் நம் கண்முன்னே கொண்டு வந்து காட்சிப்படுத்தும் தன்மைக்கு இதோ ஒரு சான்று:

பல்லவி

இங்கி லீசுக்காரர் அநியாயக் கொடுமையை
என்னென்று சொல்வேன் அம்மா ! (இங்கி)

அனுபல்லவி

பங்குக்குத் தகப்பன்பால் மகன்சண்டை செய்வதும்
பாரிக்கு நாயகன் பயப்படு கின்றதும்
எங்கும் பசுக்கள் மேய்தற் கிடமற்றுப் போனதும்
எளியவர் வழக்கிழந் திடுவதும் முதலாக (இங்கி)

சரணம்

சப்பாத்திக் கள்ளிக்கும் தரிசுக்கும் தீர்வை
தடையறக் கொடுத்திடத் தண்டங்கள் செய்வதும்

மெய்ப்பார்ப் பார் வீட்டினிற் பிறந்த பிள்ளைகளும்
வேதங்கள் படியாமல் வேலை கேட்டலைவதும்
துப்பாக்கி எனும்திருட் டாயுதம் வாள்முதற்
சொல்லும்நல் ஆயுதத் தொகைகளை வெல்வதும்
பொய்ப்பாட்டுக் கவிஞர்க்குப் புகழ்ச்சியும் மெய்ப்பாடற்
புலவருக் கிகழ்ச்சியும் பொலிவதும் போலுள்ள... (இங்கி)

(கீர்த்தனைப் பாடல் திரட்டு : 14)

என வரும் கீர்த்தனையின் வழி வண்ணச்சரபரின் சமகாலச் சமுதாய உணர்வுகள் சொற்களில் வெடித்து வெளிக்கிளம்புவதனைக் காண்கின்றோம். ஆகச் சுவாமிகளின் சீர்திருத்தச் சிந்தனையையும், ஆட்சியாளரின் கொடுஞ்செயல்களைச் சுட்டிக்காட்டும் போக்கையும் சமுதாய நல்வாழ்வை விரும்பும் எண்ணங்களையும் பல பாடல்கள் வழி அவர் வெளிப்படுத்திப் பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

மரபுவழி வந்த சமயத்துறவி வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள், பிறர் அக்கால கட்டத்தில் சொல்லத்துணியாத கைம்பெண்டிர் மறுமணம், கலப்புத் திருமணம் ஆகியன குறித்து அழுத்தம் தந்து பேசியுள்ளமை அவருடைய சீர்திருத்தச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. குடும்ப ஒழுக்கமும் சமுதாய ஒழுக்கமும் சிதையக் கூடாது என்ற நல்லெண்ணமே இதற்குக் காரணம் ஆகும். சமகாலத் தமிழ்ச் சான்றோர் பேசியுள்ள பெண் கல்வியின் தேவையையும் இன்றியமையாமையையும் நன்கு எண்ணிச் சமுதாய உணர்வுடன் வண்ணச்சரபர் தாமும் பெண்கல்வி பற்றிக் கூறித் தம்முடைய முற்போக்கு எண்ணத்தைத் தெரிவித்துள்ளார். ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழுணர்வு தடைப்பட்டுத் திருக்கோயில்களில் வடமொழியுணர்வு மேலோங்கி இருந்தது. இதனை எதிர்த்துத் திருக்கோயில்களில் தமிழ் முழங்க வேண்டும் என்று முழங்கியதால் இவர்தம் மறுமலர்ச்சி எண்ணம் இனிது புலனாகும். துறவியான வண்ணச்சரபர் ஆங்கில ஆட்சியின் கொடுமைகளை எண்ணி நெஞ்சம் கொதித்துள்ளமை அவர்தம் படைப்பின் வழி வெளிப்படுகின்றது. இதனால் இவருடைய சீர்திருத்தச் சிந்தனை சமயம் கடந்து சமுதாயம் சார்ந்தது என்பது வெளிப்படை.

# கம்பன் காட்டும் தேசிய நீர் வழிச்சாலை

இரா. மகாலட்சுமி
அண்ணாமலைநகர்

"தவித்த வாயிற்குத் தண்ணி முதலில் கொடு" என்பது நம் முதுமொழி, ஆனால் இன்றைக்குத் தண்ணீரை விலைக்கு வாங்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். நகரவாசிகள் இன்றைக்குக் குடிநீருக்காக மட்டும் குறைந்தது 1000 ரூபாய் வரை செலவிடுவதைப் பார்க்கமுடிகிறது. குடிப்பதற்கே, இந்நிலையெனில் பயிர் செய்வதற்குக் கேள்விக் குறியாகவே உள்ளது.

"வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்"

என்ற பாரதியின் கனவு, கனவாகவே இருப்பதையே காணமுடிகிறது.

நாடு சுதந்திரம் பெற்று 66 ஆண்டுகள் ஆகிவிட்டன. நதி நீர் இணைப்பினைப் பற்றி அனைவரும் பேசியும், சிந்தித்துக் கொண்டும் இருக்கிறோம். ஆனால் செயல் என்பது கிஞ்சித்தும் இல்லை என்றே கூறலாம்.

கம்பன் அன்றைக்கே சரயுநதி என்ற ஒரு நதியின் வழியாகத் தேசிய நீர் வழிச் சாலையை உருவாக்கினார்.

## சரயுநதி

சரயுநதியினுடைய சிறப்பினைக் கூறுமிடத்து, பிறந்த குழந்தைக்கு, தாய்ப்பால் சுரக்கும் தாய் முலையின் இன்றியமையாமைபோல் கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகில் வாழும் எல்லா உயிருக்கும் நீர் இன்றியமையாது விளங்கும் என்று நீரின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்.

"சரயு வென்பது தாய் முலையன்னதிவ்
வுரவு நீர் நிலத் தோங்கு முயிர்க்கெலாம்"

- ஆற்றுப்படலம், பாடல் எண். 24

தண்ணீருக்காக மூன்றாம் உலகப் போரே மூளும் என்று அறிஞர்கள் எச்சரித்திருக்கின்ற இந்நிலையில் நதியைத் தாயின் முலையோடு ஒப்பிட்டுக்

கூறுமிடத்து நமக்கெல்லாம் எச்சரிக்கை விடுப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. தாய்ப்பாலைத் தாயைத் தவிர யாரும் தரமுடியாது. அதுபோல நீரையும் யாராலும் உருவாக்க முடியாது. மேகத்திலிருந்து மழையைப் பெறுவதற்கான வழியையும் அதன் வழி நதி நீர் பெறுவதற்கான உபாயத்தையும் அறிந்து செயல்பட்டால் தான் எல்லா உயிர்களையும் காப்பாற்ற முடியும் என்ற உண்மை நிலையைச் சரயு நதி வழி உணரவைக்கிறார்.

## சரயு நதி செல்லும் குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலத்தில் பொதுவாக, அருவி நீரும், சுனை நீருமே கருப்பொருளாகக் காணப்படும். ஆனால், கம்பன் சரயு நதி நீரை வரவழைத்து, குறிஞ்சி மகளிர் இடித்துச் செய்த வாசனைப் பொடி குங்குமப் பூவோடு சரயு நதியின் நீரையும் சேர்க்கிறார். அதோடு ஏலக்காய், சந்தனம், வெட்சிப்பூ, சரபுன்னைப் பூ, வேங்கைப் பூ, பச்சிலை, மலையில் கட்டப்பட்ட இனிய தேன்கூடு, அகில் கட்டையோடு இணைந்து நறுமணம் கமழ்வதாகக் குறிப்பிடுகிறார்.

"கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்

ஒடுக்குறு சாந்தஞ் சிந்தூ ரத்தொடு நரந்த நாகம்

கடுக்கைநாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்

அடுக்கலி னடுத்த தீந்தே னகிலொடு நாறு மன்றே"

– ஆற்றுப்படலம் – பாடல் எண். 25

## சரயு நதி செல்லும் பாலை நிலம்

எயினர் எயிற்றியர் வாழும் இந்நிலத்தில் கருப்பொருளாக நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு கூறப்படுகிறது. சரயு நதி பாலை நிலத்திலும் பாலை வார்ப்பதாகக் கம்பன் குறிப்பிடுகிறார். கம்பருக்கு வறட்சியான பூமியைக் காண்பதே துன்பமாகக் கருதியவர் என்பதையும் உணர முடிகிறது. எனவே, வேடர்கள் வாழ்கின்ற சிறிய ஊர்களுக்கும் சரயு நதி செல்வதாகக் குறிப்பிடுகிறார்.

"எயினர் வாழ் சிறூரப்பு மாரியின இரியல் போக்கி"

– ஆற்றுப்படலம் – பாடல் எண். 26

குறிஞ்சியை அடுத்து சரயுநதி பாலை நிலத்திற்குச் செல்வதாகக் கம்பர் குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சரயு நதி செல்லும் முல்லை நிலம்

முல்லையின் கருப்பொருள் குறுஞ்சுனை நீரும், கான்யாற்று நீருமே ஆகும். தசரதன் ஆட்சி புரிகின்ற கோசல நாட்டின் சரயு நதியின் நீர் இப்போது பாலை நிலத்தை நிரப்பிவிட்டு முல்லை நிலத்திற்கு வருகை தந்திருக்கிறது. இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் வாழ்கின்ற இந்நிலத்தில் உறைந்து நறுமணமுள்ள தயிரும், வெண்ணையும், நெய்யும் சரயு நதி வாரியெடுத்து உட்கொண்டதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணையுந் தெளிந்த நெய்யும்

உறியொடு வாரியுண்டு" – ஆற்றுப்படலம் – பாடல் எண். 26

## சரயு நதி செல்லும் மருதம் நிலம்

உழவர்கள், உழத்தியர் இருக்கும் மருத நிலத்தில், சரயு நதியின் வருகையால் மதகுகளின் கதவினை முட்டவும் அதைப் பார்த்து உழவர்கள் கைகளை உயர வெடுத்து ஆரவாரிப்பதாகவும், நீர் நிலைகள் நிரம்பி வழிவதாகவும் குறிப்பிடுகிறார்.

"கதவினை முட்டி மள்ளர் கையெடுத் தார்ப்ப வெய்தி

நுதலணியோடை பொங்க" – ஆற்றுப்படலம் – பாடல் எண். 28

## சரயு நதி செல்லும் நெய்தல் நிலம்

உவர் நீரும், உவர் நீர்க்கேணியும் இருக்கும் இடமே நெய்தல் நிலமாகும். அந்நெய்தல் நிலத்தில் சரயு நதி சென்று மருத நிலமாக மாற்றியதாம்.

"புல்லிய நெய்தல் என்னைப் பொருவறு மருதமாக்கி"

– ஆற்றுப்படலம் – பாடல் எண். 29

சரயு நதி சென்றால் நெய்தலும் நீர் செழிக்கும்; மண்வளம் கொழிக்கும் எனக் குறிப்பிடுகிறார்.

## சரயு நதி பல இடங்களுக்குச் செல்லல்

ஐவகை நிலங்களைத் தவிர வாய்க்கால்களிலும், சோலைகளிலும், பொய்கைகளிலும், தடாகங்களிலும் சென்றதாகக் குறிப்பிடுகிறார். உயிரினால் உடல் இயங்குவது போல நீரினால் தான் உலகம் இயங்கும் என்பதால் சரயு நதி

பல இடங்களிலும் பாய்வதாகக் குறிப்பிடுகிறார்.

"ஓதிய உடம்பு தோறு முயிரெனவுலாய என்றே"

– ஆற்றுப்படலம் – பாடல் எண். 32

உடம்பிற்குள் உறைகின்ற உயிருடன் சரயு நதியை ஒப்பிடுகிறார். அதற்கும் மேலாக நீரினைக் கம்பர் பரம்பொருளாகவே பார்க்கிறார். பரம்பொருளைப் பல பேர் சொல்லி அழைக்கிறார்கள். அதுபோல நீர் இருக்கும் இடத்தினையும் ஏரி, தடாகமாகக் குறிப்பிடுகிறார்கள்.

"எல்லையின் மறைகளானாலும் மியம் பரும் பொருள் தென்னை"

*– ஆற்றுப்படலம் – பாடல் எண். 3*

இறுதியில் கம்பர் நீரையே பரம்பொருளாகப் பார்க்கிறார்.

## முடிவுரை :

"நீரின்றி அமையாது உலகு" என்பதை மக்கள் உணரவேண்டும் என்பதை உணர்த்துகிறார். நீரினைத் தாயின் முலை பாலாகவும், உடம்பினுள் இருக்கும் உயிராகவும், இறுதியில் பரம் பொருளாகவும் கொள்க என்பதை உலகிற்கு உரைக்கிறார். ஐவகை நிலங்களால் ஆனதே இத்தேசமும், உலகமும். கம்பர் ஒரு நதியான சரயு நதியை வைத்தே தேசத்திற்கு நீர் பாய்ச்சுகிறார். கம்பனின் தேசப்பற்றும் சமூக அக்கறையும், அனைவரும் சுகமாக வாழும் வழியினை அடையும் விதத்தை உணர வைக்கவே ஒரு நதியை ஐவகை நிலனுக்கும் பாய்ச்சினார் என்பதை உணர முடிகிறது.

"தேசிய நீர்வழிச் சாலை அமைந்தால் "அறுநூறு மில்லியன் பேருக்குத் தடையின்றி குடிநீர் கிடைக்கும். 1,500 கோடி ஏக்கர் கூடுதல் பாசன வசதி பெறும். 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். 2,500 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். 40 ஆயிரம் கோடி வெள்ளச்சேதம் தவிர்க்கப்படும். – தினமலர் வாரமலர் நாளிதழ் – 5.5.2013 ப.எண். 21

என்ற புள்ளி விவரத்தை வாரமலர் நாளிதழ் வெளியிட்டுள்ளது. கம்பரின் கணக்கும் இதுவாகத் தான் இருக்க முடியும் என்பதால் ஒரு நதியையே ஐநிலங்களுக்கும் பாய்ச்சினான். தேசிய நதி நீர் பின்னாளில் உலக நதி நீர்த் திட்டத்திற்கு வழி வகுக்கும் என்பதால் நீரைப் பரம் பொருளாகப் பார்த்து தேசியம், உலகம் என்று கம்பருடைய பார்வை உலகளாவிய பார்வையாக, மக்கள் நலப் பார்வையாக இருப்பதனை உணர முடிகிறது. அனைத்து நதிகளும் இணைந்து அனைத்து சுகமும் பெற கம்பன் நமக்கெல்லாம் வழிகாட்டியாயிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

✿ ✿ ✿

# குறையட்டும் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஆசைகளைக் குறையுங்கள்; அமைதி கிட்டும் !
அருவருப்பைக் குறையுங்கள்; உறவு கிட்டும் !
பேசுவதைக் குறையுங்கள்; வெற்றி கிட்டும் !
பிழைகளினைக் குறையுங்கள், உயர்வு கிட்டும் !
ஏசுவதைக் குறையுங்கள்; இனிமை கிட்டும் !
இழிசெயலைக் குறையுங்கள்; ஏற்றம் கிட்டும் !
பூசல்களைக் குறையுங்கள்; நேசம் கிட்டும் !
பொறாமையினைக் குறையுங்கள்; புகழும் கிட்டும் !

விளைநிலத்தில் களைகுறைந்தால் விளைச்சல் ஓங்கும் !
விடிவெள்ளி ஒளிகுறைந்தால் விடியல் தோன்றும் !
அளவின்றி உண்பதுவும் குறைந்தால் தானே
அண்டிவரும் நோய்களினைத் தடுத்தல் கூடும் !
பிளவுசெய்யும் சாதிவெறி குறைந்தால் தானே
பேதமிலாச் சமுதாயம் உருவாய் ஆகும் !
களவுகளும் ஊழல்களும் குறைந்தால் அன்றோ
காணும்நம் திருநாடு நிமிர்ந்து நிற்கும்?

# பஞ்ச பூதங்கள்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

செம்மொழியாம் தமிழ்மொழி வல்லுநர்கள் விண்ணையும் மண்ணையும் சேர்ந்த தொகுப்பை ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரித்துக் கூறியுள்ளனர். அவை, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, விசும்பு என்பனவாம். இவை முறையே நிலம், நீர், தீ, கால், வான் என்பனவாகும்.

நிலம் என்பது நாம் வாழும் பூமியைக் குறிக்கிறது. நீர் என்பது விண்ணிலிருந்து பொழியும் மழையைக் குறிக்கிறது. தீ என்பது வெப்பத்தையும் ஒளியையும் தரும் கதிரவனைக் குறிக்கிறது. கால் என்பது வெளியிலுள்ள வளி மண்டலத்தைக் குறிக்கிறது. வளி என்பது திங்கள், மேகம், உடுக்கள் முதலியவற்றைக் குறிக்கிறது. பஞ்ச பூதங்கள் விண்ணும் மண்ணும் ஒன்று சேர்ந்த தொகுதி என்பது இதன்வழி புலனாகிறது.

வஞ்சக மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். – குறள். 271

இக்குறட்பாவில் பஞ்ச பூதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒருவனின் வஞ்சக மனத்தை மற்றவர்கள் அறியாவிட்டாலும் அவன் தேகத்திலுள்ள பஞ்சபூதங்களும் அறிந்து தமக்குள் சிரித்து ஏளனம் செய்யும். இஃது இக்குறட்பாவிற்கு திரு.வி.க. அவர்கள் அளித்த உரையாகும்.

இவ்வுரையின் வழி மண்ணையும் விண்ணையும் சார்ந்து வாழும் மனிதனின் உடலில் பஞ்ச பூதங்களும் அடங்கியுள்ளன என்பதை அறிய இயலும்.

திருக்குறளில் அமைந்துள்ள பஞ்ச பூதங்களைக் குறள் எண்ணுடன் காண்போம்.

தீயினால் சுட்ட புண் – 129
நீரின்று அமையாது – 20
வளி வழங்கும் – 245
நிலம் என்னும் நல்லாள் – 1040
விசும்பின் மதிக்கண் – 957

இலக்கணங்களில் அமைந்துள்ள பஞ்ச பூதங்களைக் காண்போம்.
நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும், தொல்காப்பியம் – பொருள் – 635.

நிலமென நீரெனத் தீயெனக் காற்றெனக் காயமென வாகிய பூதம்

- நன்னூல் - 428

மற்ற இலக்கியங்களில் அமைந்துள்ள பஞ்ச பூதங்களைக் காண்போம்.

வானோ புனல்பார் கனன்மா ருதமோ. - கந்தரனுபூதி - 3

தீயும் பவனமும் நீருந் தரணியும்
வானும் செறிதரு....... - திருப்புகழ் - பொது. 80. பவனம் - காற்று.

மண்ணையும் புனலையும் வளியையும் காலையும்
விண்ணையும் படைத்த ... - தாயுமானவரின் மாணவர் அருளையர்.

வானாகி வளிஅனலாய் நீருமாகி
மலர்தலை உலகாகி.... - திருவருட்பா - மகாதேவமாலை

அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமும்.......... - திருவருட்பா - மகாதேவமாலை.

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி.

- திருவாசகம் - போற்றித் திருவகவல்

உன்மண் உலக மண்ணில் சேர
நீர் நீரில் ஓட
நெருப்பு நெருப்பில் எரிய
காற்று காற்றில் பறக்க
வானம் வானத்தில் கலக்க
நீ எங்கு மறைந்தாயோ... - பழைய ஒப்பாரிப் பாடல்

தமிழ் இலக்கண இலக்கியங்கள் மண்ணும் விண்ணும் சேர்ந்த தொகுதியான பஞ்ச பூதங்களைப் பல்லிடங்களில் பகர்ந்துள்ளன. எனவே தமிழ் இலக்கண இலக்கியங்கள் பரப்பளவில் மண்ணையும் உயரத்தில் விண்ணையும் ஒக்கும்.

# சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே !

பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன்
சென்னை

தமிழில் உள்ள சங்க இலக்கியங்களை ஆராய்ந்த மேலை நாட்டு அறிஞர்கள் பலர், கிரேக்கம் முதலான இலக்கியங்களில் உள்ள செவ்வியல் கூறுகள், சங்க இலக்கியங்களில் இருப்பதைக் கண்டறிந்தார்கள்.

சங்க இலக்கியப் பாடல்கள் தேர்ந்தெடுத்த தன்னுணர்ச்சிப் பாடல்களோடு ஒப்பிடும் தகுதியுடையன. உலக இலக்கியப் படைப்புகளில் சங்க இலக்கியத் தொடர்கள் உச்சி நிலையை எட்டிப் பிடிக்கின்றன என்று பியரிமெய்லி கூறினார் என்று கமில் சுலபெல் மேற்கோள் காட்டியுள்ளார். (Tamil culture Tamil poetry 2000 years ago)

சங்கத் தொகுப்பில் இடம் பெறும் 26,350 அடிகள், தமிழ் உலகின் ஒப்புயர்வற்ற மொழி என்பதை நிலைநிறுத்தப் போதுமானது என்று செக் நாட்டு அறிஞர் கமில் சுலபெல் உரைத்தார். (Smile of Muruga) தமிழ்மொழி கிரேக்க மொழியை விடப் பண்பட்டது. இலத்தீனை விட அழகானது. ஆற்றலிலும் முழுமையிலும் ஆங்கிலம், ஜெர்மனி முதலிய மொழிகளுக்கு இணையானது என்று பல மொழிகளை அறிந்தவரும் ஆங்கிலம் - தமிழ் அகராதி படைத்தவருமான டாக்டர் வின்ஸ்லோ கூறியுள்ளார்.

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் என்பவர், பன்மொழிப் புலமை பெற்றவர். 'அவர், தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்தது. இது சமஸ்கிருதத்திலிருந்து உருவாகவில்லை. இது இந்தியாவிலேயே தோன்றிய இலக்கிய மரபுடையது. சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், சீனம், பாரசீகம், அரபுமொழி ஆகியவற்றுக்கு இணையான செவ்வியல் இலக்கியங்களை இது பெற்றுள்ளது. நவீன இந்தியாவின் பண்பாடு, மரபு ஆகியவற்றுக்கு முதன்மையான தனிப்பட்ட வழி மூலமாகும் என்று கூறியுள்ளார்.

செவ்வியல் என்பதற்குப் பலவிதமான இலக்கணங்கள் கூறப்படுகின்றன. லெக்சிகன் யூனிவர்சிட்டி கலைக் களஞ்சியம், மீஉயர்வு, அழகியல், எளிமை, சீர்மை, கட்டுப்பாடு, வடிவ ஒழுங்கு, காரண காரியத் தொடர்பு ஆகியவற்றைச் செவ்வியல் பண்புகளாக அறிவித்துள்ளது.

ஆக்ஸ்போர்டு அகராதி, மீஉயர்வு, தொன்மை, தரமுடைமை, எளிமை, சீர்மை, பாடல் பொருளும் வடிவமும் ஒத்திருத்தல் முதலியவை செவ்வியல் தன்மைக்கு உரியவை என்று கூறியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த சிலரும் செவ்வியற் கூறுகளை ஆராய்ந்தனர். மொழியியல் அறிஞர் ச. அகத்தியலிங்கம் உலகப் பொதுமை, நிலைபேறு, பொதுச் சார்புநிலை, தெளிவு, தோற்றம், கட்டுப்பாடு, எளிமை, கருவும் உருவும், ஒன்றிய உறவு ஆகியவை செவ்வியற் கூறுகள் என்று உரைத்துள்ளார். முனைவர் செ. சாரதாம்பாள் கிரேக்க - இலத்தீன் தொடர்புடைமை, தலைமையுடைமை, தொன்மையுடைமை, மரபுடைமை, உருவமும் உள்ளடக்கமும் பொருந்தியிருத்தல் முதலியவை செவ்வியல் தன்மையின் பண்புகள் என்று கூறியுள்ளார். தொன்மை, உயர்வு, வளமை, சீர்மை முதலியவற்றைச் சங்க இலக்கியங்கள் பெற்றிருப்பதால் அவை செவ்வியல் இலக்கியங்கள் ஆயின என்று வா.செ. குழந்தைசாமி குறிப்பிட்டுள்ளார். முனைவர் மலையமான், மீஉயர்வு, தொன்மை, மரபுடைமை, உலகப் பொதுமை, எளிமையும் தெளிவும், நிலைபேறு, பொருளும் வடிவமும் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். சில செவ்வியல் கூறுகள், சங்க இலக்கியங்களுடன் பொருந்துமாற்றை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

## தொன்மை

காலத்தால் மிகவும் பழமையும், முதிர்ச்சியும் உடைய இலக்கியங்கள் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் என்று கருதப்படுகின்றன. கிரேக்க இலக்கியம் கி.மு. 9ஆம் நூற்றாண்டில் தொடங்கியது என்று உரைக்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்தின் தொன்மையை இவ்வாறு வரையறுக்க இயலாது. அதன் இலக்கிய வரலாறு மறைந்த குமரிக் கண்டத்திலிருந்து தொடங்குகிறது. குமரிக் கண்டத்தில் முதல் தமிழ்ச்சங்கம் இருந்தது. அதன் காலம் கி.மு. 8000 என்று கணிக்கப்பட்டுள்ளது. குமரிக் கண்டத்தின் மறைவைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன்"

என்று சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது.

இன்று கிடைத்துள்ள நூல்களில் முதலாவதாக இருப்பது தொல்காப்பியம். இது இலக்கண நூல். எந்த ஒரு மொழியிலும் இலக்கண நூல் முதலில் தோன்றாது. எள்ளினின்று எண்ணெய் தோன்றுவது போல இலக்கியத்தினின்று இலக்கணம் தோன்றும். தொல்காப்பியத்தின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என வரையறுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திற்கு முன்னால் அகத்தியம், ஐந்திரம் போன்ற இலக்கண நூல்கள் இருந்தமையை அறிய முடிகின்றது. தொல்காப்பியத்தில் என்மனார் புலவர், என்ப, மொழிப, அறிப என்று தம் காலத்திற்கு முன்னால் இலக்கணம் வரையறுத்துள்ள இலக்கணங்களைப் பற்றித் தொல்காப்பியர், 256 இடங்களில் குறித்துள்ளார் என்று முனைவர் மலையமான் கூறியுள்ளார். (செவ்வியல் மொழி தமிழ், பக். 112-115)

உலக வீரயுகப் பாடல்களோடு ஒப்பிடும் தகுதி பெற்ற தமிழ் வீரயுகப் படைப்புகள் (சங்க இலக்கியம்) ஏறத்தாழ கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக இருக்கலாம் என்று க. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். (Tamil Heroic Poetry V2 : P. 152)

## தலைமைத் தன்மை (அல்லது) மீ உயர்வு

பின்வந்த இலக்கியங்கள் அனைத்தும் போற்றிப் பின்பற்றும் சிறப்புடையது முதன்மை இலக்கியம் எனப்படும். தனக்கு முன்பு தோன்றிய இலக்கியங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்று ஓர் இலக்கியம் நிகழுமானால், அதைத் தலைமையுடைய இலக்கியம் எனலாம்.

எந்தவோர் இலக்கியமும் தன் காலத்திற்கு முன்பு விளங்கிய சிறப்பான ஒன்றைத்தான் சான்றாகக் காட்ட முடியும். பிற்கால இலக்கியங்கள், சங்க இலக்கியங்களைச் சான்றாகக் காட்டுவதுடன் அதன் நிலையினை இறைவனுடன் இணைத்தும், தெய்வீகத் தன்மைப் படுத்தியும் புகழ்ந்தும்

கூறுகின்றன. இத்தன்மையானது, சங்க காலத்திற்குப் பிற்பட்டவர்கள் சங்க இலக்கியங்களைத் தலைமையாக ஏற்றுக் கொண்டு இங்ஙனம் கூறியுள்ளனர் என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது.

நன்னூல் உரையில் சங்கர நமச்சிவாயர் உரைப் பகுதியும் இதை வலியுறுத்துகிறது. செந்தமிழ் நிலமாவது யாதெனில்,

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப

என்று வரையறுத்துள்ளது. பாண்டியனையே தமிழ்நாடன் எனச் சான்றோர் கூறுதலானும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சங்கப் புலவர்களைச் சான்றோர் என்று பெருமையுடன் குறிப்பிடும் வழக்கம் பிற்கால உரையாசிரியர்களிடம் காணப்படுகிறது. தொல்காப்பிய மரபியல் உரையில் பேராசிரியர், இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின் சான்றோர் செய்யுளுள் காணப்படும் என்று கூறியுள்ளார். (559) கிளவியாக்க உரையில் நச்சினார்க்கினியர், அன்றியும் சான்றோர் செய்யுட்களிலும் உருகியர் ஒளியினை எனவும் ஞாயிற்றுருவுகிளர் வண்ணங்கொண்ட (பதிற். 52, 29, 30). உருவக் குதிரை ( அகம். 1, 2) எனவும் வேண்டுருவம் கொண்டதோர் கூற்றங்கொல் (கலி. 59:9) எனவும் பிறாண்டும் கூறுமாற்றான் உணர்க என்ற சங்கப் பாடல்களைப் பாடியவர்களைச் சான்றோர் எனச் சுட்டுதல் காணலாம். பிற்காலத்தார் சங்கப் புலவரையும் அவர்தம் பாடல்களையும் மிக மதித்து, தலைமையாக ஏற்றுப் போற்றியமையை அறிய முடிகிறது. கம்பரும்,

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவி
சவியறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்

என்று அகத்துறை ஐந்திணை பொருந்தியவற்றைச் சான்றோர் கவி எனச் சுட்டியுள்ளார்.

சங்க இலக்கியம் சிறு பகுதியாக இருந்தாலும், இது தமிழ் வரலாற்றில் முதலில் வைத்து எண்ணப்படும் தகுதியினைப் பெற்றது. சங்க இலக்கிய வரலாற்றைப் பார்க்கும் போது, சங்க காலத்திற்குப் பிற்பட்ட இலக்கிய வளர்ச்சி நிலைகள் அனைத்தும் வடிவம், கருத்து, உத்தி என்ற ஏதாவதொரு நிலையில், சங்க இலக்கியச் செல்வாக்கும் தாக்குரவும் காணப்படுகின்றது. இவற்றிலிருந்து சங்க இலக்கியத் தலைமையை அறிய முடிகிறது.

## உலகப் பொதுமை

செவ்வியல் இலக்கியத்தின் முக்கியமான ஒரு பண்பு அது கூறும் உலகப் பொதுமையாகும். எத்தனையோ பண்புகள் அதற்கு வேண்டியிருப்பினும் எல்லோரும் மிக இன்றியமையாத ஒரு பண்பாக இதைக் குறித்து நிற்பர். ஒரு கவிதை அல்லது இலக்கிய மேம்பாடு பெற்று நிற்பதற்கு இப்பண்புகள் வேண்டும்.

சங்க இலக்கியங்கள், இந்நிலையில் தலை சிறந்து விளங்குகின்றன. அது புறப்பாடல்களாயினும் அகப்பாடல்களாயினும் பொதுமைப் பண்பை மையமாக வைத்தே பாடப்பட்டிருக்கின்றன. சாதி, மதம், காலம், நாடு என்ற கட்டுப்பாடுகளைக் கடந்து எல்லாவிதமான மக்களுக்கும் பொருந்துவதான ஒன்றுதான் உலகப் பொதுமையாகும்.

ஒரே பாடலால் உலகப் புகழ் பெற்ற கணியன் பூங்குன்றனார் பாடிய பாடல், குறிப்பிடத்தக்க பாடலாகும். ஒரு பெரிய ஆற்றில் போகும் நீரோட்டத்தின்படியே அதிலுள்ள தெப்பம் செல்லும். அதுபோலவே இந்த அரிய உயிரும் இயற்கையின் முறைப்படியே செல்லும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். சமனிலை மன உணர்வைப் பெற்றவர்களுக்கு இன்பமும் துன்பமும் ஒன்றுதான். அவர்களின் பார்வையில் பெரியோரும் ஒன்றுதான் சிறியோரும் ஒன்றுதான்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னாது என்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கு மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம். 192)

என்று அவர் பாடினார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், இத்தகைய சிறந்த எண்ணங்களுடன் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. உலகப் பொதுச் சகோதரத்துவம், ஒரே உலகம், ஒரே நாடு, ஒரே எண்ணம், ஒரே வாழ்வு (universal brotherhood, one world, one nation, one community) என்றெல்லாம் இருபதாம் நூற்றாண்டில் கூறப்படும் கருத்துகளை எண்ணிக்கூடப் பார்க்காத அக்காலத்தில் சிறந்த எண்ணங்களையும் கோட்பாடுகளையும் கொண்டு வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தை அறிய முடிகிறது.

உலகப் பொதுமையைக் காட்டுவதற்காகக் கண்ட ஒரு பெரும் இலக்கிய உத்திதான் சிறப்புப் பெயர் சுட்டாத கவிதைகளை ஆக்கி நின்றமை என்று கூறலாம். பொதுமைப் பண்புகள் தான் முக்கியமே அன்றி உணர்வுகளைக் கொண்டவர்கள் முக்கியமல்லர். உணர்வுகளைத் தாங்குவதற்காகக் கவிஞர்களால் ஆக்கப்பட்ட கதை மாந்தர்கள்தான் வெற்பன், நாடன், ஊரன், மகிழ்நன், துறைவன் போன்றவர்கள்.

நல்ல கவிதையின் சாரம் உலகப் பொதுமையே என்றும் இப்பண்பு இல்லாத கவிதை, கவிதையே ஆகாது என்றும் கால்ரிட்ஜ் என்பார் கூறியுள்ளார். சங்கப் புலவர்களின் பார்வை அகலப் பார்வையாக இருந்தது. அகில உலகப் பார்வையாகவும் இருந்தது. அதனால் தான் சங்கப் புலவர்கள் உலகப் பொதுமை சான்ற பாடல்களை எழுதினர். அதனால் பாடல்களும் நிலை பெற்றன; அவர்களும் நிலை பெற்றனர்.

## நிலைபேறு

சிறந்த இலக்கியங்கள், நூற்றாண்டுகள் பலவாயினும் இன்றும் நம்மிடையே வாழ்கின்றன; வளர்கின்றன. இலக்கியங்களைப் பற்றி

ஆராய்கின்ற அறிஞர்கள், நல்ல இலக்கியங்களுக்கு உரிய பண்பாக, அவற்றின் நிலைபேற்றுத் தன்மையை வற்புறுத்திக் கூறுவர். நல்ல இலக்கியங்களே காலம் கடந்தும் மொழி கடந்தும் வாழ்கின்றன எனக் கூறலாம். Literature must have permanance என்பார் வின்செஸ்டர்.

வரலாறு உள்ளதை உள்ளவாறே கூறுவது தத்துவம் தனிப்பட்டவரைப் பற்றிப் பேசாது. ஆனால் கவிதையோ கற்பனைத் திறத்தாலும் தத்துவத்தாலும் கவிஞன் எண்ணியதைப் புனைந்து கூறும். நாடு கடந்து, இனம் கடந்து, காலம் கடந்து, வாழ வைக்கும் கலை கவிதைக் கலையே. இதற்குக் காரணம் கவிதையில் அடங்கிக் கிடக்கும் நாடக வழக்குதான். தொல்காப்பியம்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம் (பொருள் : நூற்.56)

என்று கூறும். நல்ல பாடுபொருளும் நல்ல கவித்துவமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்கும் போது கவிதைகள் நிலைபேறு பெற்றுச் சாகாவரம் பெறுகின்றன என்பர். உலகளாவிய பொது உண்மைகளைச் சிறந்த கவித்துவத்தால் உள்ளத்துணர்வுகளை எழுப்பி உள்ளத்தில் பதியச் செய்யும் கவிதைகளே சிறந்த கவிதைகள் எனக் கூறலாம். அவையே நிலைபேறு பெற்று மக்களிடையே வாழ்ந்து வருகின்றன.

சங்கப் பாடல்கள் 2381, எழுதிய புலவர்கள் 473. இந்த 473 புலவர்களும் நம்மிடையே வாழ்வதற்குக் காரணம் அவர்கள் ஆக்கிய பாடல்கள் தாம். இவை சங்க காலத்திற்குப் பிறகும் இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. எத்தனையோ இடர்களுக்கும் இன்னல்களுக்கும் இடையே நிலைத்துள்ளன. இதற்குக் காரணம் இலக்கிய வளமும் வனப்பும் தான்.

ஒரே ஒரு பாடல் பாடி, படிப்போரின் உள்ளத்தில் நெகிழ்வை ஏற்படுத்தியவர் பாரிமகளிர். ஒரு திங்களுக்குள் அவர்களின் வாழ்வில் நடந்த மாற்றங்கள் படிப்போரின் நெஞ்சை உருக்கும் தன்மையன. ஒரு திங்களுக்கு முன் வெண்ணிலவு ஒளி வீசியபோது தாயற்ற அவர்களைத் தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய், கண்ணின் மணிபோல் காத்தவர். வாடிய முல்லையின் துயர் கண்டு மணித்தேர் ஈந்த அருளுள்ளம் கொண்டவர். முந்நூறு ஊர்களுக்கும், பெரும் பெயர் பறம்பு நாட்டிற்கும் அண்ணல் நெடுவரைக்கும், வானத்து மீன்கள் அன்ன சுனைகளுக்கும் உரியவர். ஒரு

மாதத்திற்கு முன் பறம்புக் குன்றத்தில் தந்தையாருடன் குன்றனைய வாழ்வு வாழ்ந்தனர். ஒரு மாத இடைவெளியில் இவ்வெண்ணிலவில் வென்றெறி முரசின் வேந்தர் குன்றையும் குன்றமனைய தந்தையையும் அல்லவா கொன்றனர்? தந்தையை அல்லவா இழந்து விட்டோம் என்ற ஆற்றாமை, பேரிழப்பு - ஏக்க எதிரொலியோடு முடிகிறது பாடல். எந்தையும் இல்மே என்ற தொடர், படிக்கும் ஒவ்வொருவர் உள்ளத்தையும் அழ வைக்கிறது. சூழ்ச்சியால் தங்கள் தந்தை கொலையுண்ட சோகம், அநியாயமாக மூவேந்தர்களின் சூழ்ச்சிக்குப் பலியான நிலை, துன்பத்தின் எல்லை, சோகத்தின் உச்சிநிலை, யாரும் இல்லையே என்ற ஏக்கம், எதுவும் இல்லையே என்ற மனத்தேக்கம் இவற்றையெல்லாம் எண்ணிய போது எழுந்த பாடல். இதைத்தான் வோர்ட்ஸ் வொர்த் (recollected in tranquility) அமைதியில் பிறக்கும் கவிதை என்றார். தங்கள் வாழ்வை எண்ணி, அசைபோட்ட போது பிறந்தது தான் இந்த அற்புதமான பாடல்.

## மரபுடைமை

முன்னோர் சொன்ன சொல், பொருள், கொள்கை எதுவாயினும் அம்முன்னோர் எடுத்துரைத்தபடியே பின்னுள்ளோர் பின்பற்றுவது மரபாகும். பழைமை பாராட்டும் பண்பும் மரபின் அடிப்படையாகும். மரபு என்பது கட்டுப்பாடு என்றும் பொருள்படுகின்றது. இலக்கியங்கள் அனைத்தும் மரபுகளைச் சார்ந்து நிற்கும் ஒரு கலைப் படைப்பாகும். சங்க இலக்கியங்கள் மரபினால் உருவாகியுள்ளன. அதனால் விதிகளும் வரன்முறைகளும் மிகுதியாக உள்ளன. சங்க இலக்கியம் தனக்கு முன்பு இருந்த தொல்காப்பிய மரபுகளையும் பின்பற்றியுள்ளது. தனக்குப் பின்பு மரபு வழிப்பட்ட இலக்கியங்கள் எழுவதற்கும் தோற்றுவாயாக அமைந்துள்ளது.

தொல்காப்பியர், மரபியல் என்று தனியாக ஓர் இயலை வகுத்துள்ளார். நூல்மரபு, மொழி மரபு, தொகை மரபு, விளி மரபு என்று அவர் தன் இயல்களுக்குப் பெயரிட்டு மரபு காத்தார். நெடுங்காலமாக ஊன்றிவிட்ட மரபியலை அவர்,

> மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
> மரபு/வழிப்பட்ட சொல்லினான (தொல். மரபு : 81)

என்றார்.

எப்பொருள் எச்சொல்லை எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே என்றார் நன்னூலார்.

தமிழில் எழுத்துகளின் வகைகள், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பாகுபாடு யாவும் திட்டமிட்டு மரபாக்கப்பட்டன. குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பவை தமிழுக்கு உரிய மரபுதான்.

## எளிமை (Simplicity)

செவ்வியல் தன்மையின் ஒரு கூறாகப் பாடல் எளிமையை அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். செவ்வியல் இலக்கியங்கள் கரடு முரடில்லாமல் படித்துணர்வதற்கு எளிமையாக இருத்தல் வேண்டும். எளிமை எனக் கூறும்போது அது பாடலின் பல பிரிவுகளிலும் செயல்பட வேண்டும். பல பிரிவு என எண்ணும்போது பல உறுப்புகள் என்பதே பொருள். அதன் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், அசை, சீர் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கலாம். இவை அனைத்திலும் எளிமை இருத்தல் வேண்டும். இந்த எளிமைதான் தெளிவைத் தரும். தெளிவுதான் பாடலுக்கு உயிரூட்டுவது. தெளிவினால்தான் கவிஞன் தான் சொல்ல வந்த கருத்தைத் துல்லியமாகக் கூறுகிறான். குறித்த பொருளை முடிய நாட்டுவது தான் யாப்பு. இதற்குத் துணை புரிவது எளிமையே. நல்ல கவிதை என்பது சொல்ல வேண்டிய பொருளை மிகச் சுருக்கமாக எளிமையாகக் கூறுவது தான் என்பர் அறிஞர் பெருமக்கள்.

சங்க காலப் பெருமக்கள் இதனை நன்கு உணர்ந்திருந்தனர். சின்னஞ்சிறு கவிதைகளால் மனித இனத்திற்கே உரிய பல பெரிய எண்ணங்களை, எளிமையான நிலையில் பல சிறந்த எழுத்தோவியங்களைப் படைத்தனர். புலமைப் பிராட்டியார் ஔவையாரின் சொல்லோவியங்களில் ஒன்று.

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந். 23)

இப்பாடலில் காணப்படும் சொற்கள் மிக மிக இனிமையானவை. மனவு என்ற சொல்தான் கடினமானது. மீதி உள்ளவை அனைத்தும் இன்றும் அன்றாட வழக்கில் உள்ளவை. அகராதியைப் புரட்ட வேண்டியதில்லை. ஆராய்ச்சியில் புக வேண்டியதில்லை. மகள், நல், நெடும், பாடுக, பாட்டு, கூந்தல், குன்றம் போன்ற சொற்கள் எளிய சொற்கள் மட்டுமல்ல. எழில் மிகுந்த் சொற்களும் கூட.

அவர் நன்னெடுங்குன்றம் என்பதிலேயே சிலம்பம் ஆடியுள்ளார் ஔவையார். அவர் நன்னெடுங்குன்றம் பற்றிப் பாடினாயே அதை இன்னொரு முறை பாட மாட்டாயா? என வேண்டினாள். அங்கிருந்த தாயர் அதிர்ச்சியால் தாக்கப்பட்டனர். அவரா? எவர்? யார் அவர்? என்ற சொல்லிலேயே விடுகதைக்கு விடையை அறிவித்து விட்டாள்.

கவிதை பற்றிக் கூறிய கவிமணி,

தெள்ளத் தெளிந்த தமிழில் – உள்ளம்
தெரிந்து ரைப்பது கவிதை

என்றார். கம்பரும்,

சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கம் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்

என்றார்.

சங்க இலக்கியங்கள், சின்னஞ்சிறு கவிதைகளில் காணப்படும் செம்மாந்த சீரிய இலக்கியங்கள். செவ்வியல் இலக்கியங்களின் பண்புகளையும் பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்டு விளக்கும் வளமான இலக்கியங்கள். உலக இலக்கியங்களில் காணப்படும் சிறந்த கவிதைக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்ட இலக்கியங்கள். உலகப் பொதுமைகளைக் கவிதைகளின் கருவாக்கிப் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வுக் கொள்கைகளைப் பிரதிபலித்த இலக்கியங்கள். எளிமை, திண்மை, திட்பம், செறிவு, அமைதி, அடக்கம், ஆரவாரமின்மை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய செவ்வியல் இலக்கியத்திற்குரிய பண்புகளைக் கொண்டவை. கவிதை அழகையும் கலையாக்க உண்மைகளையும் கொண்டவையாகத் திகழ்கின்றன.

# உலா இலக்கிய வகை வளர்ச்சி

முனைவர் கி. இராசா
தமிழ்ப் பேராசிரியர் (பணி நிறைவு)

## உலா இலக்கிய மூலக்கூறு

ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய் வகைமை யான - தொல். புறத். 75

எனும் தொல்காப்பிய நூற்பா உலா இலக்கிய வகைக்கு மூலக் கூறாக அமைந்துள்ளது. ஊரின் கண் காமப்பகுதி நிகழ்தலும் உரித்து என இதற்கு உரைகூறும் இளம்பூரணர், ஊரொடு தோற்றம் என்பது பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக வருவது... அவரவர் பருவத்திற்கு ஏற்பக் கூறும் வகைச் செய்யுள் என்று விளக்கம் தந்துள்ளார். இந்நூற்பாப் பொருளை நச்சினார்க்கினியர் இரண்டாகப் பிரித்து வைத்துள்ளார். பக்கு நின்ற காமம் ஊரிற் பொது மகளிரொடு கூடிவந்த விளக்கமும் பாடாண்திணைக்கு உரித்தென்று கூறி, அது பின்னுள்ளோர் ஏழுபருவமாகத் பகுத்துக் கலிவெண் பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம் என்று அவர் விளக்கியுள்ளார். உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தின் வாயிலாக, இவர்கள் காலத்தில் உலாச் செய்யுள் வழக்கில் இருந்ததென்றும், அவ்வுலா இலக்கிய மூலக் கூறுகளைக் கருத்தில் கொண்டு மேற்சுட்டிய நூற்பாவுக்கு இவர்கள் உரை செய்துள்ளனர் என்றும் அறியலாம்.

## வகைமைக் கூறுகள்

பெண்டிரின் பருவமும் விளையாட்டும் பிறபொழுது போக்கும் குறித்த செய்திகள் சங்க இலக்கியம் தொட்டுச் சிற்றிலக்கியக் காலம் வரை பல்வேறு இலக்கியங்களில் உலா வகைமைக் கூறுகளாகப் பயின்று வந்துள்ளன. பாட்டுடைத் தலைவனைக் கண்டு பெண்கள் மயங்குவதும், அவனைக் காண அவர்கள் வீதியில் நிறைவதும், பருவப் பெண்டிரின் இயல்பும் நிலையும் செயலும் காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் தொடர் வளர்ச்சி பெற்றுள்ளன.

சங்கப் பாடல்களில் புனலாடல், கிளி பயிற்றுதல், பந்தாடல், கழங்காடல், தெற்றியாடுதல், பாவை செய்தல், ஓரையாடுதல் என்பன மகளிர் தம் விளையாட்டுக்களாகவும், பொழுது போக்குகளாகவும் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, பேரிளம்பெண் எனும் பெண்டிர் தம் பருவமும் 'இயல்பும் பற்றிய குறிப்புகளும் சங்கப் பாடல்களில் உள்ளன.

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவனான கோவலனைக் காதலால் கொண்டேத்தும் கிழமையான் (27 : 54) என்று கண்டோர் பாராட்டுகின்றனர். சேரன் செங்குட்டுவன் வடதிசைப் போரில் வென்று வஞ்சி நகருக்குத் திரும்பிய செய்தியில் உலாப் பொருண்மையின் உட்கிடக்கையை உணர இயலும். செங்குட்டுவன் நாடு திரும்பிய போது அவனை வாழ்த்திய ஐந்நிலமக்களின் பாராட்டுரை ( 27 : 210 - 50 ) உலாத் தலைவனுக்கு உரைக்கப்படும் சிறப்புரையாக அமைந்துள்ளது.

சிலப்பதிகாரத்தின் பின் எழுந்த மணிமேகலையில் மதங் கொண்ட யானையை அடக்கிய உதய குமாரன், அதன் மீது உலாப் போந்த சிறப்புப் பாராட்டப்பட்டுள்ளன. (பளிக்கறை : 46 - 50) மணிமேகலையை அடுத்து கி.பி. 750 இல் இயற்றப்பட்ட பெருங்கதையில், வாசவதத்தையைக் கவர்ந்து சயந்தி நகருக்குத் தேரேறி வருகின்ற உதயணனின் தோற்றமும், பொலிவும், அவ்வுலாக் கண்டு மயங்கிய பெண்டிர் நிலையும், நகர்வலங் கண்டது எனும் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

(எ.டு) பெதும்பை மகளிர் விதும்பி நோக்கினர் (2.7.78)

பேதை மகளிர் வீதி முன்னினர் (2.7.103)

தெரிவை மகளிர் தேமொழிக் கிளவி (2.7.113)

என்று எழுவகைப் பெண்டிரின் இயல்புகள் நீராட்டரவம் எனும் பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. தலைவன் உலாவரல், அவன் தோற்றப் பொலிவு, எழுபருவப் பெண்டிர் வீதி நிறைதல், உலாக் கண்ட அவர்களின் நிலை, செயல் என்பன போன்ற உலா இலக்கியத்தின் தலைமைக் கூறுகள் முதன் முறையாகப் பெருங்கதையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. எனவே உலா இலக்கிய வகைக்கான அடித்தளமாகப் பெருங்கதை அமைகிறது என்பது

பெறப்படுகிறது. பெருங்கதைக்குப் பின்னர் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றில் இதன் வளர்ச்சித் தொடர்ச்சி காணப்படுகிறது.

சீவக சிந்தாமணியில் நந்தகோபனது ஆநிரையை மீட்டு வெற்றியுலா வரும் சீவகனின் சிறப்பும், அவனைக் காண முந்தும் மகளிரின் செயலும், அவர்தம் செயலிழந்த நிலையும் ( கோவிந்தையார் இலம்பகம் ) உலாக் கூறுகளாகக் கருதத் தக்கவையாகும்.

உலாவைப் பற்றிய செய்திகள், உலாவியற் படலம் என்று தனியாட்சிப் பெற்றுள்ளதைக் கம்பராமாயணத்தில் காணலாம். அதில் சீதையை மணம் புரிய மிதிலை நகர வீதிகளில் இராமன் உலா வருவதும், அவனோடு நம்பியர் உடன் வருவதும், இன்னியம் அருகில் முழங்குவதும், மாதர்கள் கூடி மொய்ப்பதும் உலாவியற் காட்சிகளாக விளக்கம் பெற்றுள்ளன. (பால. 1147 – 87)

உலா இலக்கியக் கூறுகள் கைக்கிளைப் பொருண்மையோடு இணைந்து வரும் புதிய வளர்ச்சியை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது. பாண்டியன் உலாவரும்போது அவனைக் காணவிடாது மகளைத் தாய் காவல் செய்யும் காட்சியும் (33, 35), பாண்டியனைக் காணாது தலைவி வருந்துவதும் (28, 29, 33, 37, 48, 60, 61), கதவுத் துளை வழியாக அவன் உலாவருவதைக் காண்பதும் (49), பின் அவனுக்காக ஏங்குவதும் (34, 36, 39, 43, 44, 47, 53, 58), அவன்பால் தோழியையும், நெஞ்சையும், வாடைக் காற்றையும் தூது விடுவதும் (32, 45, 47), பாண்டியன் தலைவனாக அமையும் உலாக் காட்சிகளாகும். இவ்வாறே சோழன், சேரன் உலா வரும் போது அவர்களைக் காணும் நங்கையரின் கையறு நிலைகள் கைக்கிளைப் பாடல்களாக முத்தொள்ளாயிரத்தில் இடம் பெற்றுள்ளன. உலாவினைக் காணவிடாது கதவினை அடைத்தல், இற்காப்புச் செய்தல், உலாக் கண்டு காமமிகு கழியடரால் புலம்பல், தலைவி தன் நெஞ்சையும் பிறபொருட்களையும் தூதுவிடுத்தல் என்பன உலா இலக்கிய வகைகளின் வளர்ச்சியில் புதிய முயற்சியைச் சுட்டுகின்றன. மேலும் இவை உலா தூது இலக்கிய உறவையும் காட்டுகின்றன.

## பக்தி இலக்கியங்கள்

சிற்றிலக்கிய வளர்ச்சியில் பக்தி இலக்கியங்களின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கனவாகும். காரைக்காலம்மையார், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், கருவூர்த்தேவர் முதலியோர் அருளிய திருப்பதிகங்களில் உலா இலக்கிய வகைகள் பரவிக் கிடக்கின்றன.

இறைவன் திருவீதி உலா புறப்படும் போது இன்னியங்கள் பல முழங்கியமையைக் காரைக்காலம்மையார் குறித்துள்ளார். திருப்புன்கூர், திருத்தோணிபுரம் எனும் தலங்களில் இறைவன் திருவுலாப் போந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தர்,

தேர்கொல் வீதி விழவார் திருப்புன்கூர் - தேவா:27:7

தேரோடும் நெடுவீதித் திருத்தோணிபுரத்து - தேவா:1:60:5

என்று அருளிச் செய்துள்ளார். திருவாதிரைப் பெருநாளில் திருவாரூர்ப் பெருமான் திருவுலாக் கொண்ட காட்சியைத் திருநாவுக்கரசர் அடிகள் ஆரூர் ஆதிரை நாளில் அது வண்ணம் (தேவா 4 : 21 : 8) என்று பாடியுள்ளார். திருக்குறுகை வீரட்டானத்தில் ஏழுநாட்களும் இறைவன் திருத்தாண்டவக் கோலம் பூண்டு திருவீதியுலா வந்த போது மங்கையர் மையல் கொண்டு மயங்கியதைப் பின்வருமாறு திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

செந்துவாய் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர் கூடி மயங்குவார் - தேவா 4:50:2

கருவூர்த் தேவரின், திரைலோக்கிய சுந்தரம் திருமுறைப் பாடலில் உலாக்கண்டு தொழுது, அழுது, இரங்கும் பெண்ணுக்கு இறைவன் அருள் செய்ய வேண்டும் (2) என முறையிடுவதாக அமைந்துள்ளது. மேலும் தெரிவை, மடந்தை, பேதை எனும் பருவத்தார்க்கு அருள் செய்யுமாறு இறைவனை வேண்டும் தோழி கூற்றாக அமைந்துள்ளது (8 : 1, 10 : 1, 10 : 3). இஃது அப்பர் பாடியருளிய உலாக் கூறின் வளர்ச்சியாகக் கருதத்தக்கது. திருவீதிஉலா, தொண்டர் புடை சூழ உலா வருதல், மங்கையர் கூடி மயங்கல், மங்கையர்க்கு அருள் வேண்டல் முதலிய பக்தி இலக்கியப் பகுதிகள் உலா இலக்கியப் பகுதிகள் உலா இலக்கிய வகைமைகளின் வளர்ச்சிக்குத் துணை நின்றுள்ளன.

## இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பல்

தமிழில் புதிய இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் காணும் முயற்சி கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. சிற்றிலக்கிய வகைகளுக்கான இலக்கணத்தைத் தொகுத்துத் தந்த முதல்நூல் பன்னிரு பாட்டியலாகும். கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த புலவர்கள் பன்னிரு பாட்டியலில் இடம் பெற்றுள்ள நூற்பாக்களை இயற்றினர் என்றும் கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் பன்னிரு பாட்டியல் நூல் வடிவம் பெற்றது என்றும் கருதுவர். இச்செய்திகளை வைத்து நோக்கும் போது, கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட ஆதி உலா ( திருக்கயிலாய ஞான உலா) உலா இலக்கியத்திற்கான இலக்கணத்தை நல்கியிருக்க வேண்டும் என்றும், ஆதி உலாவை முன் மாதிரியாகக் கொண்டு பன்னிரு பாட்டியல் உலா இலக்கணத்தை முழுவதுமாகத் தந்திருத்தல் வேண்டும் என்றும் இடமுண்டு. இக்கருத்தினை வலியுறுத்துமாறு பின்வரும் ஆதிஉலா (இலக்கியம்) பன்னிரு பாட்டியல் (இலக்கணம்) ஒப்பீடு அமைகிறது.

இறைவன் ஒப்பனை, இறைவன் வெளிப்படல், அவன் புகழ், கணங்கள் புடைசூழ இறைவன் விடை மீது ஏறி உலா வருதல், பிற கடவுளரும் இறைவன் மீது உலா வருதல், இன்னிசை எங்கணும் இயம்ப நிற்றல், உடன் நினறோர் வாழ்த்து, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனும் எழு பருவப் பெண்டிரும் இறைவனைக் கண்டு மயங்கி நிற்றல் என்பன ஆதியுலாவின் இலக்கியக் கூறுகளாகும். ஆதியுலாவின் இலக்கியக் கூறுகளனைத்தும் பன்னிரு பாட்டியல் இலக்கணமாக ஒளிர்கின்றன. இத்தகு உலாக் கூறுகளை முதனிலை (ப. பா. 7), பின் எழுநிலை ( ப.பா. 49) என்று பன்னிரு பாட்டியல் இரு கூறுகளாகக் காட்டுகின்றது. குடிமரபு, கொடை, விடியல், நன்னீராடல், நல்லணி அணிதல், தொன்னநகர் எதிர்கொளல், நன்னெடு வீதியில் மதகளிறு ஊர்தல் என்பனவற்றை முதனிலையின் கூறுகளாக இந்நூல் வகுத்துள்ளது. பேதை, பெதுமை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனும் எழுமகளிர் பருவத்தை உரைப்பது பின் எழுநிலையின் கூறுகளாகப் பன்னிரு பாட்டியல் பகுத்துள்ளது.

மகளிர்தம் பருவத்திற்கேற்ற விளையாட்டுகளும் பொழுது போக்குகளும் ஆதியுலாவில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோலப்பந்தலில் பாவை விளையாட்டயர்வதும், வெண்மணலால் தூதைச் சிறுசோறு ஆடுதொழிலாள், சிற்றில் இழைத்தாடும் குறிப்பும் பேதைப் பருவத்திற்கு உரியனவாக ஆதியுலாவில் காட்டப்பட்டுள்ளது. மன்மதன் உருவை வெண்மணலில் தீட்டி விளையாடும் பெதும்பைப் பருவத்தாள் பற்றிய குறிப்பும் (86-89), பூவையுடன் சொல் பயிற்றிக் கொண்டிருக்கும் மங்கைப் பருவத்தாள் பற்றிய செய்தியும் (100-111), பண் பாடும் மடந்தையைப் பற்றிய குறிப்பும் (112-132), யாழ்மீட்டிப் பாடும் அரிவையாளைப் பற்றிய விரிவும் (133-148), வெள்ளிப் பலகையில் பொன் கவற்றுக் காய்களால் மணிச் சூது ஆடிக் கொண்டிருக்கும் தெரிவைப் பருவத்தாள் பற்றிய விளக்கமும் (149-171), பல்லாண்டுப் பாடிக் கொண்டிருக்கும் பேரிளம் பெண் பற்றிய குறிப்பும் (178-179) ஆதியுலாவில் இடம் பெற்றுள்ளன. இந்நூல், பாவை, கழங்காடல், அம்மானையாடல், ஊசல், கிளி பற்றல், யாழ் மீட்டல், புனலாட்டம், பொழில் விளையாடல், நன்மது நுகர்தல் முதலிய மகளிர் விளையாட்டுக்கள் அவர்தம் பருவத்திற்கேற்ப உலா நூல்களில் இடம் பெறல் வேண்டுமெனப் பன்னிரு பாட்டியல் விதி வகுத்துள்ளது. ( ப.பா. 58) இவ்வாறு உலா இலக்கியத்தில் அமையப் பெற்ற வகைமைக் கூறுகளைக் கொண்டு பன்னிரு பாட்டியல் உலா இலக்கணத்தை வகுத்துத் தந்துள்ளதை அறியலாம்.

## வகைமைகள் வகையாதல்

முந்தைய இலக்கியங்களில் தொடர்ந்து வந்த உலா இலக்கிய வகைமைகளை ஆதியுலா தன்னுள் கொண்டு, உலா இலக்கிய வகையாக வளர்ந்து நின்றது. இதனைப் பின்வரும் அகச்சான்று ஒப்பீடுகளின் வாயிலாக அரண் செய்யலாம்.

(1) கில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற் றேர் அணிந்து கொம்மை முலை எனும் புரவி பூட்டி
நல்லெழில் நெடுங்கண் அம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப் போர்க் காமன்சேனை செம்மல்மேல் எழுந்ததன்றே
(- சீவகசிந். கோவிந்தை 50)

எனவரும் சீவகசிந்தாமணிப் பாடலடிகளின் வகைமைக் கருத்தினை,

மாட நடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக் - கேடில்

சிலம்பு பறையாகச் சேயாக் கண் அம்பா
விலங்கு கொடும் புருவ வில்லா நலந்திகழும்
கூழையின் தாழவளை ஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாம் தேருந்திச் சூழொளிய
கொங்கை மாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைத்த ஆயிழையார் (- திருக்கயிலாய : 62 - 69)

என்று திருக்கயிலாய ஞானவுலா வகைக் கருத்தாக வளர்ந்துள்ளதை அறியலாம்.

(2) இறைவன் திருவீதி உலா புறப்படும்போது இன்னியங்கள் பல முழங்கியமையைக் காரைக்காலம்மையார் தம் திருப்பதிகத்தில் குறித்துள்ளார்.

துத்தம் கைக்கிளை விளரிதாரம் உழைகிளி யோசைபண் கெழுப்ப பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் காடிகை வன்கை மென்றோல் தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடாடும் எங்கள் அப்பன் இடந்திரு வாலங் காடே

- மூத்த திருப். 9

இறைவன் திருக்கயிலை உலா செல்லும் போது மேற்குவந்த இன்னியங்கள் அனைத்தும் ஆதியுலாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சல்லரி தாளம் தகுணிதந் தத்தளகம்
கல்லகு கல்ல வடம் மொந்தை - நல்லியைத்
தட்டழி சங்கஞ் சஞ்சலந் தண்ணுமை
கட்டழியால் பேரி கரதாளம் - கொட்டும்
குடமுழவங் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் - இடவிய
மத்தளம் துந்துபி வாய்ந்த முருடிவற்றளல்
எத்திசை தோறும் எழுந்தியம்ப.... (- ஆதியுலா 44 - 7)

(3) காலையே போன்றிலங்கும் மேனி (அற்புதத். 65) எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் காலை, கடும்பகல், மாலை, இருள் எனும் பொழுதுகளை இறைவன் திருமேனியில் காண்பதாகக் காரைக்காலம்மையார் பாடியுள்ளார். சேரமான் பெருமாள் நாயனார், தாம் இயற்றிய பொன் வண்ணத் தந்தாதியில் இதே போன்று ஞாயிறு, வெங்கதிர், கார் இருள், வெண்முகில் என்பனவற்றை இறைவன் தன் திருமேனியில் கண்டு பாடியுள்ளார். இத்தகு இலக்கியப் பயிற்சியின் காரணமாக இவ்வாசிரியர், ஆதியுலாவின்கண், இருள்தீர் புலன், உச்சி, அந்திவான், ஓரால் இரவு, தண் இளங்கார், வாய்ந்த இளவேனில் என்று சிறுபொழுது, பெரும் பொழுதுகள் தெரிவைப் பருவத்தாளின் மேனியில் குடிகொண்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகுப் பகுதிகள் இலக்கிய வகைமைகளின் வகை நோக்கிய வளர்ச்சியைச் சுட்டுவதாகும். ( வகைமை என்பது வளர்பண்பு என்றும் வகை என்பது வளர்ச்சி முழுமையடைந்த நிலை என்றும் நினைவிற் கொள்ள வேண்டும்)

## இலக்கண வளர்ச்சியும் மரபும் மாற்றமும்

உலா இலக்கணத்திற்கான முழுமையான இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் மட்டும் தந்துள்ளது. உலா இலக்கியத்தின் இருவகை நிலைகள் (ப.பா. 49) எழுபருவப் பெண்டிர்க்குரிய வயது வரம்பு (ப.பா. 87-93), அவ்வப் பருவத்திற்குரிய விளையாடல் (ப.பா. 82), ஆடவரின் ஏழ் பருவமும் அவர்க்குரிய வயது வரம்பும் (ப.பா. 51) உலாத் தலைவராகப் பாடுவதற்கு உரியவர்கள் (ப.பா. 54) முதலிய உலா இலக்கியக் கூறுகளுக்கான இலக்கணங்கள் பன்னிரு பாட்டியலில் கூறப்பட்டுள்ளன.

பின்வந்த பாட்டியல் நூல்கள் உலா இலக்கியத்தின் ஒரு சில கூறுகளுக்கு மட்டும் இலக்கணம் உணர்த்துகின்றன. சில புதிய உலாக் கூறுகளையும் குறிப்பிடுகின்றன.

பாட்டுடைத் தலைவன் களிற்றை ஊர்தியாகக் கொண்டு உலா வருவான் என்றும் (ப.பா. 49), எழுபருவத்திற்குரிய மகளிர் விளையாட்டுக்கள் இவை இவை என்றும் பன்னிரு பாட்டியல் மட்டும் கூறுகின்றது. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு உலா இலக்கியம் பாடப்பெறும் எனச் சுவாமிநாதம் குறிப்பிட்டுள்ளது ( சுவாமி 167) இளையோரும் உலா வருவதற்குரியவர்கள் எனும் புதிய செய்தியைப் பிரபந்த மரபியல் (14), சிதம்பரப் பாட்டியல் (10), இலக்கண விளக்கம் (858) எனும் நூல்கள் குடிமகன்

எனும் தொடரால் குறிப்பிட்டுள்ளன. குடிமகன் எனும் ஓர் இலக்கிய வகையைப் பாட்டியல் நூல்கள் சுட்டுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். முத்து வீரியத்தில் உலாவின் தலைவன், இளமைப் பருவத் தலைமகன் (மு.வீ. 124) என்று அழைக்கப்படுகின்றான். பிரபந்த தீபிகை உலாத் தலைவனை, மிக்க இளமைப் பருவமாய், உற்ற தலைமகனை (பி.தீ. 31) எனக் குறித்துள்ளது. பேதை முதல் ஏழ்பருவப் பெண்கள் மயக்குற எனத் தொடங்கும் பிரபந்தத் திரட்டு நூற்பாவில் புதை தசாங்கர் தாங்கிப் போற்றும் (பி.தீ. 31) எனும் புதிய உலாக் கூறு இடம் பெற்றுள்ளது. தசாங்கத்தின் விரிவைத் தொன்னூல் விளக்கம் தந்துள்ளது (தொ.வி. 260) உலா இலக்கியங்களில் தசாங்கக் கூறுகளும் இடம் பெற்றுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கது.

உலாவரும் தலைவனைக் கண்டு பெண்கள் காமுறுதலை உலாவின் சிறப்பு இலக்கியக் கூறாக உலா இலக்கியங்கள் படைத்துக் காட்டியுள்ளன. ஆனால் பாட்டியல் நூல்களில் காமுறுதல் என்ற குறிப்பு இல்லை. மாறாகக் காதல் செய்தல் (ப.பா. 48), செய்கை மறந்து அயர்தல் (வெ.பா.செ. 24) ஒத்தல் (சுவா.167), தொழுதல், வியந்து தொழுதல் (தொ.வி.260) பார்த்து வணங்கல், (மு.வீ.யா.124), துதித்தல் (பி.தீ.19) என்று பாட்டியல் நூல்கள் மகளிர் செயலைக் குறிப்பிடுகின்றன.

உலாக் கூறுகளுள் பாட்டுடைத் தலைவராகக் கருதத் தக்கவர் குறித்தும், உலாத் தலைவரைக் கண்ட மகளிர் செயலைக் குறித்தும் வகுக்கப்பட்ட பாட்டியல் இலக்கணங்கள் புது மரபு வளர்ச்சியைக் காட்டுவதை மேற்சுட்டிய சான்றுகளின் வழி அறியலாம்.

## வகைவளர்ச்சிக் கூறுகள்

(1) பாடல் தலைவருள் வருணப் பகுப்பு : முதல் இலக்கியமான ஆதியுலா, இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. மானிடரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட முதல்நூல் மூவருலாவகும். விக்கிரமசோழன், குலோத்துங்க சோழன், இராசராசசோழன் ஆகிய மூவரும் உலாப் போந்ததாக இந்நூலில் ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். உலாவில் மானிடர் பாட்டுடைத் தலைவராக அமைவது மரபுச் சிதைவு என்பர். ஆதியுலாவின் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு, இவற்றுக்குப் பின்னர்த் தோன்றிய பாட்டியல் நூல்கள் வேந்தரும், நால் வருணத்தாரும் உலாத் தலைவர்களாகப் பாடுவதற்குரியவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளன. (ப.பா. 54)

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)

## வாசகர் வாசகம் ①

ஊற்றுகோலில் அனுபவப்பொன் நிரப்பியீர்ந்தார், கா.வே. !

செல்வமுங்கல் ஆய்ந்துரைத்தார் கோ. இராஜ லட்சுமி !

சாற்றுபுகழ் திருக்குறள்தேன் வழங்கினார்ஐம் பொறியார் !

ஆற்றலூற்றாம் இயற்கையிறை விளக்கினார்மெய் யப்பன் !

ஊற்றுதொடர் கட்டுரைத்தார் உமாதேவி அழகிரி !

உயர்தமிழை ஆய்ந்துகற்கும் ஒப்பிலாத நற்குணம்

போற்றுளத்தார் அறிவரசன் ஞஸனசேக ரன்எனல் !

கொடைஉவகை ! வாழ்த்துவகை ! கட்டுரைக்கென் நன்றியே !

அன்புடன்,
**புலவர் சி. பாண்டுரங்கன்,** ஆம்பூர்

## வாசகர் வாசகம் ②

### பொங்கல் வாழ்த்து

புத்தாண்டாய்த் தைத்திங்கள் பிறக்கும் மாட்சி

பொங்கலெனும் திருநாளாய்த் தமிழர்க் காச்சு

வித்திட்ட நஞ்சையில்தான் உழவன் செந்நெல்

விளைத்தந்த பசிப்பிணிக்கே மருந்து தந்தான்

புத்தரிசி புதுவெல்லம் நெய்யும் வார்த்துப்

பொங்கலிட்டே மங்கையர்தாம் ஆதவன்தாள்

தித்திக்கும் செங்கரும்பு மஞ்சள் இஞ்சி

தேன்கதள் கொண்டேத்தும் பொங்கல் வாழ்க !

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

*பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று.*

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.*

**மதுரை செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி - பாக்கியலட்சுமி இணையரின் குமாரர் செல்வன் கு. மாரிமுத்து - செல்வி பிரீத்தி இருவருக்கும் 15.12.2013 அன்று மதுரை தாய் மூகாம்பிகை மகாலில் நடைபெற்ற *திருமணத்தின் போது வாசித்தளித்த,***

# திருமண வாழ்த்து மடல்

தேன்துளி ததும்பும் மலர்தோறும்
புள்ளினம் இசைக்கும் பொழில்சூழ்
நான்மாடக் கூடல் நகரதனில்
நறுந்தமிழ் வளர்த்த தொல்குடி
கோன்முறை அரசர்தம் நெறிநின்று
குலச்சீர் போற்றிய குணநலன்
வான்புகழ் வள்ளல் பாண்டித்துரை
தேவரின் வழிவழி வந்த மரபில்

**குருசாமி** நல்லார் கலைநனிவல்லார்
கல்வியொடு பண்புள்ளம் மிகவுடையார்
ஒருபோதும் பிறர்துயரம் காணவொண்ணார்
கருத்தோடு ஒன்றியவர் **பாக்கியலட்சுமி**
இருவோரும் ஆற்றியநல் அறப்பயனால்
அவதரித்தார் திருக்குமாரர் **மாரிமுத்து**
பெருமாண்பு நிறைந்திலங்கு குடும்பத்தில்
குலவிளக்காய் ஒளிரவந்தார் **பிரீத்தியார்**

இணைந்தீர் இந்நாளில் இனிதுவாழ்க
இனநலமும் மொழிவளமும் போற்றிவாழ்க
துணைநிற்பீர் தோன்றுகிற துறைகள் தோறும்
உடனிருந்து பெற்றோரை உறவினரை
அணைபோலக் குடும்பத்தைக் காத்துவாழ்க
அகிலத்தைக் காக்கின்ற சிவசக்தி
இணையருள் என்றென்றும் பெற்றுவாழ்க
எந்நாளும் மக்களுடன் மகிழ்ந்து வாழ்க !

அருளும் பொருளும் நிறைந்து வாழ்க என வாழ்த்தும்....
**முனைவர் த. பெரியாண்டவன்**
(மேனாள் இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை) சென்னை - 600 083

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 January 2014 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.